## முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
## O.S. No.243/2023

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | **வா.த.சா. 1** |
| பெயர் | **அம்சவள்ளி** |
| க/பெ | **கண்ணன்** |
| வயது | 43 |
| ஊர் | **சேர்ந்தனூர்** |
| வட்டம் | **விழுப்புரம்** |
| மாவட்டம் | **விழுப்புரம்** |
| தொழில் | **விவசாயம்** |

மேற்படி சாட்சி இன்று 09.06.2026 நீதிமன்றத்தில் ஆஜராகி உறுதிமொழி சட்டம் 1967 பிரிவு 6 ன் படி அமர்வு எழுத்தரால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியும் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டது.

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எந்த கிரைய ஒப்பந்தமானாலும் அதை பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யாதது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியிடமிருந்து 2ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரிதான் ஆனால் எனது கிரைய ஒப்பந்தத்திற்கு பின்னிட்டு தான் வாங்கினார். 1ம் பிரதிவாதி கிரையம் செய்ததை தெரிந்து கொண்டு அதற்கு முன் தேதியிட்டு பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தத்தை உருவாக்கிக்கொண்டேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் கிரையத்தை சரியானதல்ல என்று காட்டுவதற்காக வழக்கு சொத்தின் மதிப்பை மிகவும் உயர்த்தி காட்டி உருவாக்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. சரியான மறு பயனுக்கு உரிய தொகையை செலுத்தி 1ம் பிரதிவாதியிடமிருந்து வழக்கு சொத்தை 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல.

என்னுடைய வழக்கு வீண் வழக்கு என்றும் அது உண்மையானதல்ல என்றுசொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தான் தாவா சொத்திற்கு வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்கு அருகமானது என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியமானது சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையெழுத்து செய்தார்.

(Sd/–S. Muthu Murugan)
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.